**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C)
**SPLCC.No.18/2025 - PW-41**

| | |
|---|---|
| Name | திரு.சிவசங்கரன் |
| Father Name | நாராயணன் |
| Village /Area | 1/66 Koil St, Chinna Kukundi |
| Taluk | Arcot T.k. |
| Occupation | Former |
| Age | 52 |
| Religion | இந்து |
| Aadhar Card No. | 901705494498 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 22.01.2026.

**எதிரிகள் 3,4,7 முதல் 10, 15 ஆஜர். 5, 6, 11 முதல் 14 எதிரிகள் ஆஜர் இல்லை. பா.நா.சு.சு பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் ஆற்காடு வட்டம், சின்ன குக்குண்டி கிராமம், கோயில் தெருவில் வசிக்கிறேன். நான் 2006ம் ஆண்டில் இருந்து 2009 ஆண்டு வரை தபால் துறையில் தற்காலிகமாக வேலை செய்து வந்தேன். தற்போது நான் எந்த வேலையும் செய்யவில்லை. 1991ம் ஆண்டில் என்னுடைய வலது கை கரும்பு மெஷினில் மாட்டி என்னுடைய மணிகட்டிற்கு கீழ் துண்டாகிவிட்டதால் விவசாய வேலைக்கு செல்வதில்லை. சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு வருடம் எனக்கு நினைவில்லை, நான் குக்குண்டி கிராம நிர்வாக அலுவலருக்கு தனிப்பட்ட முறையில் உதவியாளராக வேலை செய்தேன். நான் கிராம நிர்வாக அலுவலர்கள் ஆறுமுகம், சண்முகம்,

மணிவண்ணன் ஆகியோரிடம் தனிப்பட்ட முறையில் உதவியாளராக வேலை செய்தேன். விவசாயிகள் என்னை பார்த்து சிட்டா, அடங்கல், FMB, அ பதிவேடு ஆகியவற்றின் நகல்களை மின்மோட்டார் மானியத்தில் கிடைப்பதாக சொல்லி, வாங்க கேட்டார்கள். அதற்கு ஈடாக கம்ப்யூட்டர் சிட்டா பெற ரூ.20 அரசு கட்டணம் செலுத்த கொடுத்தார்கள். நான் இவைகளை கிராம நிர்வாக அலுவலரிடம் சொல்லி அந்த ஆவணங்களை பெற்று, விவசாயிகளிடம் கொடுத்தேன். அவைகளை பெற்று ஒரு சில விவசாயிகள் மானியத்தில் மோட்டார் வாங்கினார்கள். வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. இது சம்மந்தமாக என்னை வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் விசாரித்தார், அப்போது மேற்சொன்ன விவரங்களைதான் சொன்னேன்.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி, அனுமதி வழங்கப்படுகிறது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –**

வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் என்னை விசாரித்த போது, 2008ம் வருடம் ரவி என்பவர் என்னை சந்தித்து நான் சாமி எலக்ட்ரிகல்ஸில் வேலை செய்வதாக கூறி விசிடிங் கார்டு, லெட்டர் பேடுகளை காண்பித்தார் என்றும், குக்குண்டி கிராமத்தில் உள்ள விவசாயிகள் மானிய விலையில் பம்ப்செட் வாங்க சாமி எலக்ட்ரிகல்ஸில் கொட்டேசேன் வங்கி விண்ணப்பித்துள்ளதாகவும், அந்த விண்ணபத்துடன் இணைக்க வேண்டிய சிட்டாவும், கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து அடங்கல், FMB

வரைபடம், நிலஉரிமை சான்று ஆகியவற்றை வாங்கி கொடுத்ததால்தான் அவர்களுக்கு மானிய விலையில் பம்ப் செட் சப்ளை செய்ய முடியும் என்று கூறியதாகவும், மேலும் என்னிடம் சிட்டா பெறுவதற்கான விண்ணப்பங்களையும், ஒரு சிட்டாவிற்கு அரசு கட்டணமாக ரூ.20யை கொடுத்தார் என்றும், சொன்னேன் என்றால், சரியல்ல. வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் விசாரணையில், நான் அந்த விண்ணப்பங்களையும், பணத்தையும் வாங்கிக்கொண்டு தாசில்தார் அலுவலகத்திற்கு சென்று கம்ப்யூட்டர் சிட்டாவை பணம் கட்டி வாங்கினேன் என்றும், சிட்டாவில் உள்ளபடி கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்த பதிவேடுகளை சரிபார்த்து அடங்கல், FMB வரைபடம், நிலஉரிமை சான்று ஆகியவற்றில் கிராம நிர்வாக அலுவலரிடம் விஷயத்தை கூறி கையொப்பம் வாங்கினேன் என்று சொன்னேன் என்றால், விவசாயிகள் கொடுத்த விண்ணப்பங்களை பெற்று, மேற்சொன்னவாறு சான்றுகளை பெற்று கொடுத்தேன். நான் மேற்கண்ட வேலைகளை செய்ய ரவி எனக்கு போக்குவரத்து செலவும், சாப்பாடு செலவும் கொடுத்தார் என்றால், அது தவறு. விவசாயிகள் தான் ஆளுக்கு 10 ரூபாய் என எனக்கு செலவிற்கு கொடுத்தார்கள். சில நாட்கள் கழித்து ரவி என்னிடம் மேலும் விண்ணப்பங்களை கொடுத்து சான்று பெற சொன்னார் என்றால், அவ்வாறு ரவி என்னிடம் எந்த விண்ணப்பமும் கொடுக்கவில்லை. அவ்வாறு கொடுத்த விண்ணப்பங்களில் எங்கள் குடும்பத்திற்கு சொந்தமான நிலத்திற்காக என் சித்தப்பா விண்ணப்பித்திருந்த விண்ணப்பமும் இருந்தது என்றும், அதற்கு நான் ரவியிடம் என்

சித்தப்பா மானிய விலையில் பம்ப்செட் வாங்க விண்ணப்பம் எதுவும் கொடுக்கவில்லை என்றும், அந்த விண்ணப்பம் போலியானது என்றும், நான் ரவியிடம் சத்தம் போட்டேன் என்றும், எல்லா விண்ணப்பமும் இதுபோல்தான் இருக்கும் என்றும், நான் இந்த வேலையை செய்யமாட்டேன் என்று கூறியதுடன், எனக்கு தெரிந்த ஊரில் உள்ளவர்களிடம் இந்த விவரத்தை சொன்னேன் என்றாலும் அது தவறு. அதன் பிறகு நான் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு செல்லவில்லை என்றால், புதியதாக ஒரு கிராம உதவியாளர் பதவியேற்றதால் நான் அலுவலகத்திற்கு செல்லவில்லை. எதிரிகளை வழக்கில் இருந்து காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், அது சரியல்ல.

**குறுக்கு விசாரணை 3 முதல் 11, 13, 14 எதிரிகள் தரப்பில் –**

இல்லை.

**குறுக்கு விசாரணை 12, 15 எதிரிகள் தரப்பில் –**

இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness and admitted by him/her to be correct.

M SELVAM

Principal District Judge, Ranipet
Digitally signed by M SELVAM
DN: cn=M SELVAM, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

Principal District and Sessions Judge,
Ranipet